**கவனிக்க**.–*14.10.2016 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1990 - 2016 ඔක්තෝබර් මස 21 වැනි සිකුරාදා - 2016.10.21

*1990 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | *1912* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1914* |


**கவனிக்க**.– (i) ஒதுக்கீடு (திருத்தம்) சட்டமூலம் 2016, யூலை மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) இலங்கைப் பொறியியற் பேரவை சட்டமூலம் 2016, யூலை மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்தி சட்டமூலம் 2016, ஓகத்து மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிருபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஐப்பசி மாதம் 21 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, செத்தெம்பர் 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | மஹரகம | மஹரகம வடக்குப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கொழும்பு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு 5. |

10-663

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை**

பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

(1) **முகாமையாளர் (சட்ட அமுலாக்கம்)** - 01 பதவி (தலைமை அலுவலகம் - கொழும்பு)

**தகைமைகள்**.- ***வெளிவாரியான விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2) :***

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குற்றவியல் பட்டம் அல்லது எல். எல். பி. பட்டம் அத்துடன் சட்டத்தரணி தகைமை ;

அத்துடன்

பட்டப் பின்படிப்பு தகைமை (முதுமாணிப் பட்டம்) ;

மற்றும்

குறைந்தபட்சம் 12 ஆண்டுகாலம் ''முகாமைத்துவ மட்டத்தில்'' கூட்டுத்தாபனமொன்றிலோ, நியதிச்சட்ட சபையொன்றிலோ, அரச நிறுவனமொன்றிலோ அல்லது நற்பெயருடைய தனியார் நிறுவனமொன்றிலோ பணியாற்றிய அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கலைமாணிப் பட்டம் ;

அத்துடன்

குறைந்தபட்சம் 12 வருடங்கள் பொலிஸ் சேவையில் பணியாற்றிய அனுபவமுடையவராக இருத்தல் வேண்டு மென்பதுடன் குறைந்தபட்சம் 5 வருடங்கள் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் பதவி வகித்தவராக இருத்தல் வேண்டும்.

***உள்வாரியான விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2) :***

1. வெளிவாரியான விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத் தப்பட்டுள்ள தகைமைக்கு இணையான தகைமையைக் கொண்டிருத்தல் ;

2. பதவிக்கு ஏற்புடையதென கருதப்படக்கூடிய விடயத் துறையில் முகாமையாளர் தரம் I வகைக்குரிய பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் திருப்தியான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஊழியர் பிரிவிற்கான முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 2/ 2016 (01/ 01/ 2020) இற்கிணங்க சம்பள குறியீடும் மாதாந்த சம்பள அளவுத்திட்டமும் :

HM 1-1 2016 (ரூபா 81,670 - 15 x 2,270 - ரூபா 1,15,720) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/ 2016 இன் உப பிரிவு II இற்கிணங்க தொடக்கச் சம்பளமான ரூபா 47,158 உரியதாகும்.

**வயது**.- 35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

(2) **உதவி முகாமையாளர் (ஊடகம் மற்றும் தகவல்)** - 01 பதவி (தலைமை அலுவலகம் - கொழும்பு)

**தகைமைகள் :**

***வெளிவாரியான விண்ணப்பதாரிகள்***.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெகுசன தொடர்பியல்/ வெகுசன ஊடகம் பற்றிய சிறப்புப் பட்டம் அல்லது ஏற்புடைய வேறு பட்டம் ;

அத்துடன்

இப்பதவியுடன் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 2 வருடகால முன் அனுபவம்.

***உள்வாரியான விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2) :***

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப் பட்டுள்ள தகைமைக்கு சமமான தகைமையைக் கொண்டிருத்தல்.

2. பதவிக்கு ஏற்புடையதென கருதப்படக்கூடிய விடயத் துறையில் கனிஷ்ட முகாமையாளர் வகைக்குரிய பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் திருப்தியான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஊழியர் பிரிவிற்கான முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 2/ 2016 (01/ 01/ 2020) இற்கிணங்க சம்பள குறியீடும் மாதாந்த சம்பள அளவுத்திட்டமும்

MM 1-1 2016 (ரூபா 53,175 - 10 x 1,375 - 15 x 1,910 - ரூபா 95,575) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/ 2016 இன் உப பிரிவு II இற்கிணங்க தொடக்கச் சம்பளமான ரூபா 31,147 உரியதாகும்.

**வயது**.- 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்ப தாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**மேற்படி இரண்டு பதவிகளுக்குமான நன்மைகள்**.- அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக, விசேட கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப்படி, இடைக்கால கொடுப்பனவு, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு கொடுப்பனவுகள், பிரயாணக் கொடுப்பனவுகள் மற்றும்

எரிபொருள் கொடுப்பனவு ஆகியவை சேவை வகுதிக்கேற்ப வழங்கப்படும். ஊ. சே. நிதிக்கான 12% ஊ. ந. பொ. நி. இற்கான 3% அதிகார சபையினால் செலுத்தப்படும்.

**பொது நிபந்தனைகள்**.- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரசையாகவும் நல்லொழுக்கம் உடையவராகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் இலங்கையின் எப்பிர தேசத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தங்களது உரிய தகவல்களைக் கொண்ட கையொப்பமிடப்பட்ட விண்ணப்பங்களுடன் கல்வி, தொழில்சார் தகைமைகள், அனுபவம் ஆகியவற்றை சான்றுப்படுத்தும் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்க வேண்டுமென்பதுடன் உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்களையும் முகவரிகளையும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் 2016, நவெம்பர் மாதம் 3 ஆந் திகதியோ அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் முழுமைபெறாத அல்லது தெளிவில்லாத விண்ணப்பங்களும் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாத விண்ணப்பங்களும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். எந்தவிதமான ஆதரவைத் தேடுதல் அல்லது செல்வாக்கினை பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்வதுடன் சுருக்கத் தெரிவுப் பட்டியலில் உள்ளவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்பு தொடர்பாக பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அரச சேவையில்/ கூட்டுத்தாபன/ நியதிச் சபையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

தலைவர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.

இல. 330, தலவத்துகொட வீதி,
மாதிவெல,
ஸ்ரீ ஜயவர்தனபுர.
இணையம் : www.childprotection.gov.lk

10-1178

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016/ 2017

தற்போது வெற்றிடமாகவுள்ள கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கு இணைத்துக்கொள்வதன் பொருட்டான போட்டிப் பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து போட்டிப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்** :

(1) ***கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்***.- இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் கால்நடை வைத்திய அதிகாரியாக ஆகக்குறைந்தது ஒரு வருடம் (01) அத்துடன் ஆகக்கூடியது மூன்று வருட (03) நிரந்தர சேவைக் காலத்தையும் கொண்டிருத்தல் ; அத்துடன் உரிய மிருக வைத்திய விஞ்ஞானம் தொடர்பில் நான்கு வருட பட்டப்படிப்பினை முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் நிலை) மட்டத்தில் சித்தியடைந்திருத்தல்.

(2) ***ஆராய்ச்சி உத்தியோகத்தர்***.- இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் கால்நடை வைத்திய அதிகாரியாக அல்லது கால்நடை உத்தியோகத்தராக ஆகக்குறைந்தது ஒரு வருடம் (01) அத்துடன் ஆகக்கூடியது மூன்று வருட (03) திருப்திகரமான நிரந்தர சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் அத்துடன் உரிய மிருக வைத்திய விஞ்ஞானம்/ கால்நடை வளர்ப்பு விஞ்ஞானம்/ விவசாய விஞ்ஞானம் தொடர்பில் நான்கு வருட பட்டப்படிப்பினை முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் நிலை) மட்டத்தில் சித்தியடைந்திருத்தல்.

* மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் இரண்டின் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும் :

(1) முன்னைய வருடங்களில் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படுத்தப்படாது இருத்தல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்படாது இருத்தல் வேண்டும் ;

(2) முன்னைய வருடங்களில் சம்பள ஏற்றங்களை அடைந்திருத்தல்.

2. நீங்கள் இந்தப் பதவியின் பொருட்டு விண்ணப்பம் செய்ய எதிர்பார்ப்பதாயின் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி 2016.11.18 ஆந் திகதிக்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1 முதல் 6 வரையிலான தகவல்கள் முதலாம் பக்கத்திலும் ஏனைய தலைப்புக்கள் முறையாக அடுத்த பக்கத்தில் அமையுமாறு ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

3. இலங்கை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் பரீட்சையின்போது ஆள் அடையாளத்தை உறுதி செய்வதன் பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய கடவுச்சீட்டைச் சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணமாக 1,000 ரூபாவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபால்/ உப தபால் பணிமனையிலும் செலுத்திப் பெற்றுக்கொள்கின்ற பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டிவிடுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் கட்டணம் எந்தக் காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றம் செய்யவோ முடியாது.

4. பரீட்சையின் பொருட்டு அனுமதி அட்டை அனுப்பிவைத்ததன் பின்னர் விண்ணப்பதாரர் எவரேனும் ஒருவருக்கு அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பத்தின் மற்றும் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரிக்க முடியும். சகல பரீட்சை விண்ணப்பதாரர்களும் உரிய பரீட்சை மண்டபத்திற்கு அனுமதி அட்டையில் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தி பரீட்சை மண்டபத்திற்கு வருகை தரும் முதலாவது நாளில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்ட திட்ட ஒழுங்குவிதிகளுக்கு விண்ணப்பதாரர் உட்படுவர்.

5. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

6. எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்கின்ற புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். பெறுபேற்றுக்கு அமைய நிலவும் வெற்றிடத்திற்கு ஏற்ப அதிக புள்ளிகளைப் பெறுகின்ற உத்தியோகத்தர்களது திறமை வரிசைக்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் வழங்கப்படும் (பாடவிதானம் இணைப்பு 02 இல் தரப்பட்டுள்ளன.)

7. மேலும் கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தராக அல்லது ஆராய்ச்சி உத்தியோகத்தராக மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேற்றிற்கு அமைய நியமனம் பெற்றதன் பின்னர் மீண்டும் கால்நடை வைத்திய அதிகாரி/ கால்நடை உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு நியமிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய,

டி. கே. ஆர். ஏக்கநாயக்க,
செயலாளர்,
கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

2016, ஒற்றோபர் 21.

***இணைப்பு 1***

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016/2017**

APPLICATION FOR RECRUITMENT OF OFFICERS IN THE POST OF VETERINARY RESEARCH OFFICERS AND RESEARCH OFFICERS IN THE SRI LANKA ANIMAL PRODUCTION & HEALTH SERVICE - 2016/2017

☐
(அலுவலக பயன்பாட்டிற்காக)

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

பதவியின் பொருட்டு விண்ணப்பிக்கும் முறை :
(கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் - 1)
(ஆராய்ச்சி உத்தியோகத்தர் - 2) ☐
(இரண்டு பதவிகளுக்குமாயின் - 3)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறும் பெயர் :----.
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.) :----.
(iii) முழுப்பெயர் (தமிழில்) :----.

2. தற்போதைய சேவை நிலையம் மற்றும் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4. ஆண்/பெண் :

ஆண்-0
பெண்-1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

5. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

6. தற்போது வகிக்கும் பதவி :----.

7. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் முதல் நியமனத் திகதி :----.

8. (i) பதவியில் நிரந்தரம் செய்யப்பட்ட திகதி :----.
(ii) சேவைக்காலம் :----.

9. சேவை விபரம் :

| தற்போதைய பதவி | சேவைக்காலம் | | சேவை நிலையம் | திணைக்களம்/மாகாண சபை |
|---|---|---|---|---|
| | முதல் | வரை | | |
| | | | | |

10. பெற்றுக்கொண்டுள்ள பட்டம் தொடர்பான விபரம் :

| சித்தியடைந்த பட்டம்/பட்டப்பின் படிப்பு | வகுப்பு | பல்கலைக்கழகம் | வருடம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

11. விண்ணப்பிக்கின்ற முன்னுள்ள வருடங்களில் சம்பள ஏற்றங்கள் பெறப்பட்டன/ பெறப்படவில்லை என்பன தொடர்பாக-

| தொடர் இல. | ஆண்டு | சம்பள ஏற்றங்கள் பெறப்பட்டன/பெறப்படவில்லை |
|---|---|---|
| | | |

ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டுள்ளீரா ? :----.
ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருப்பின், அது தொடர்பான விபரம் (காலப்பகுதியுடன்) :----.

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :
பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் பணிமனை :----.
பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
திகதி :----.

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்

இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும், சரியானவையும் என்பதை இத்தால் உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவரின் நான் தகைமையற்றவனாவேன் என்பதுடன் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறு தெரியவரின் எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். எந்தவொரு நீதிமன்றத்திலும் குற்றவாளியாகவில்லை என்பதையும் எனது வழமையான கையொப்பத்தை இட்டு சான்றுப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு உட்படுகின்றேன் என்பதையும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

திணைக்களத் தலைவரது சான்றிதழ் :

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ...................................................... இத்திணைக்களத்தில்/........ ........................................ மாகாண சபையில் .................................................. எனும் பதவியில் உள்ளவர் எனவும் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் அவரது தனியார் கோவைக்கு அமைவாக உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவியின் நிமித்தம் இவ்வுத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவரை இத்திணைக்களத்தில் இருந்து/இம்மாகாண அரச சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதை அறியத்தருகின்றேன். (பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்.)

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை).

திகதி :----.

*இணைப்பு 02*

இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016/ 2017

1. **பரீட்சை தொடர்பான விபரம் :**

| இல. | வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | ஆராய்ச்சித் துறைக்குரிய அறிவினை அளவிடும் பொருட்டு தயார் செய்த வினாப்பத்திரம் | 2 மணித்தியாலம் | 100 | 50* |
| 2 | பொது விவேகப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 50* |

* உரிய வெற்றிட எண்ணிக்கையைவிட சித்தியடைய வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகளைப் பெற்ற உத்தியோகத்தர்களது அளவு குறைந்து காணப்படும் சந்தர்ப்பத்தில் பெறவேண்டி ஆகக்குறைந்த சித்திப் புள்ளியின் அளவைக் குறைப்பதற்கு நியமன அதிகாரிக்கு இயலும்.

2. **பரீட்சைக்கான பாடவிதானம் :**

| வினாப்பத்திரம் | பாடவிதானம் |
|---|---|
| 1. ஆராய்ச்சித் துறைக்குரிய அறிவினை அளவிடும் பொருட்டு தயார் செய்த செய்த வினாப்பத்திரம் | 1. இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் ஆய்வுச்சூழல், இலங்கையின் தேசிய ஆய்வுக் கொள்கை, விவசாய ஆராய்ச்சிக் கொள்கை, ஆய்வு நடவடிக்கையின் பொருட்டு நிதி ஒதுக்கீடு, ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய நிறுவனங்கள் ஆராய்ச்சி முன்னுரிமை.<br><br>2. ஆய்வு தலைப்பிடல், ஆய்வு வகைகள், அடிப்படையில் தயார் படுத்திக்கொள்ளக்கூடிய மற்றும் உரிய ஆய்வுகள்.<br><br>3. ஆய்வுத் தேவைப்பாடுகள், இனங்காணுதல் மற்றும் மீளாய்வு, தேவைப்பாடு, இனங்காணல் முறை மற்றும் மீளாய்வு முறைமையின் முக்கியத்துவம் வழங்குதல்.<br><br>4. ஆய்வுகளைத் தயாரித்தல், மாதிரி நிபுணத்துவ முறைமைகள், மாதிரி அளவு, பரீட்சிப்பு முறை, இடத்தேர்வின்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள், செய்முறைகள் குழு முறைமை, தர்க்க ரீதியில் மொத்த திட்டமிடல் மேற்கொள்ளல், 'அனைத்தும் அல்லது இல்லை' என்ற எண்ணக்கரு.<br><br>5. ஆய்வு தொடர்பில், சேகரிப்புக்கள், சர்வதேச மற்றும் தேசிய ஆய்வு வெளியீடுகள், சஞ்சிகைகள், தகவல் சேகரிப்புக்கள், நூல் நிலைய வலையமைப்பு.<br><br>6. ஆய்வு தொடர்பில் புள்ளிவிபரம் மற்றும் தரவுகளையும் மென்பொருள் மீளாய்வு செய்தல், ஆரம்பக் கணக்கீடு, ஒன்று திரட்டல், பொதுவான நெகிழ்வு, தொடர்புபடுத்துகை பெருக்கங்கள், நெகிழ்வு வழங்குகையில் அவற்றினை தொடராகப் பயன்படுத்துதல். |

| *வினாப்பத்திரம்* | *பாடவிதானம்* |
|---|---|
| | 7. களஞ்சியப்படுத்தல், ஆய்வுத் தீர்ப்பு வெளியீடுகள், ஆய்வு வெளியீடுகள் பொருட்டு உரித்தான மாதிரிப்படிவங்கள், எழுதும்போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களை சுருக்கமாகக் குறிப்பிடுதல் என்பவற்றில் உள்ள நன்மைகள் மற்றும் அவற்றினால் எதிர்பார்க்கும் நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றிய பல்வேறு சமர்ப்பிப்புக்கள்.<br><br>8. ஆய்வு மற்றும் மேம்படுத்துகை.- ஆய்வு மற்றும் கருத்திட்டங்களுக்கு மத்தியில் உள்ள வித்தியாசம், ஆய்வுக் கருத்திட்டங்களின் பெறுபேறுகள், ஆய்வுத் தீர்வுகளை பகிர்ந்தளித்தல், ஆய்வுக்குப் பின்னரான தொடர்புகள்.<br><br>9. ஆய்வுகளின் நடாத்தை, வேறு மூலங்களில் இருந்து தகவல் பெற்றுக்கொள்ளுதல், வெளியீட்டுக்கு பயன்படுத்தப்படாத தரவுகளை பயன்படுத்துதல், ஆய்வு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்துதல். |
| 2. விவேகப் பரீட்சை | * இதில் விண்ணப்பதாரர் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன் ஆகியவற்றைப் பரீட்சிக்கும் பொருட்டு பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளுக்கான 50 வினாக்கள் உள்ளடக்கப்பட்டு இருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

10-435